# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

புத் ௰௧ ] சிதம்பரம் ஏவிளம்பி௵ ஐப்பசி௴ ௰௧உக்கு 1897௵ அக்டோபர்௴ 25உ [இல ௰௧


### வைதிகசந்திரமௌலி
### மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி.

---

எந்த புராணப்பிரமாணத்தானும் இது அவைதிகாகமத்துள்ள தீக்ஷையைக்குறித்ததல்லவாம் புராணங்கள். இதுவும் ஒருபஸ்மதாரண விரதம் என்றதுமாத்திரமே யன்றி அதில் அக்னிதரணசம்பந்தம் உண்டென்றுவது வேறு யாதொன்றும் சொல்லவில்லை. ஸ்ரீகண்டரோ, அது அதர்வணருக்கே யுள்ளவிரதம் என்றனரேயன்றி அது பாசுபதவிரதம் என்று சொல்லவேயில்லை. அவர் பாஷ்யத்தை சுவீகாரஞ்செய்துகொண்ட இந்நவீன சைவர் ஒருவரே இச்சிரோவிரதம் மந்திரசம்ஸ்காரதீக்ஷை எனப்படும்] தாந்திரிகதீக்ஷாபரம் என்றார். ஆகையால் அவரும் யாமும் காட்டிய எல்லாப்பிரமாணங்களாலும் இங்கு சிரோவிரதம் என்பது அக்னிதாரண பஸ்மதாரணாதிகளுடன் கூடியதோர் வேதவிரதம் அதர்வணருக்கேயுரியது என்று நாட்டப்பட்டது. அது ஒருபோதும் காமிகாதிகளில் உள்ள சாம்பவியாவது சாக்தியாவது மந்திரசம்ஸ்காரதீக்ஷையாவது ஆகவேயாகாதென்க. அதர்வசிரஸில் உள்ளது பாசுபதவிரதமேயாம் என்பதிற்றடையில்லை. இதுகொண்டே ‘எந்த புராணமும் இங்ஙனம் அதர்வசிரம்கூறியது’ என்பதாதிப் பெயர்களால் பஸ்மவிதிகாட்டிய உபநிடதங்களாய ஜாபால காலாக்னி ருத்திரஜாபால தைத்தரீயங்களைக் குறித்தும் முண்டகத்தைவிட்டதுமாம் என்க. அவ்விதம்விட்டது சிரோவிரதம் பஸ்மவிரதமல்லவென்றல்ல. வைகானஸபஸ்மோர்த்துவ புண்டரம்போல ஒரேசாகைக்குள்ள வேதவிரதமாதலாற்றான் என்று மும்முறையும் மந்தரும் உணருமாறு சொல்வோம். மேல் இவரே இந்தவிரதம் அதர்வணருக்கேயன்றி மற்றவருக்கில்லை எனக்கொண்டு அதில் சொன்னவிரதம் அதர்வசிரத்துள்ளதும் வாயுசங்கிதை விரித்ததும் என்கிறார். அதுமட்டும் தவறும், ஆசிரியர் ஸ்ரீகண்டராதிசாம்பவர்சம்மதமும் எனக்காட்டினேமாகையால் அவ்வாக்யம் ஆக்ரகவாக்யமேயாம். மேலே யாம் காட்டிய பிரமாணங்களையறியாது ஸ்ரீலோககுருஸ்வாமிகளையும் அவர் பிரந்தவியாக்கியாதாக்களையும் தற்காலத்திற்றேன்றிய நவீன வைணவ பாஷண்டாதி தாந்திரிக கஜஷண்ட சண்டகேஸரியாய் பலநூல்கள் இயற்றி எங்கும் வாதப்போர்க்களங்களில் வேதவைதிகவித்துவேஷிகளை நிக்கிரகித்துவரும் எமது ப்ரம்மவித்தியா பத்திராதிபரையும் ஏதேதோ தம்மனம்கொண்டவரை திட்டித் திருப்தியடைந்தார். அது அவருக்குண்டான ஆக்கிரகத்தினலும் சதாசாரியரிடம் சம்பிரதாயமாய் சிவாத்துவித வித்யாப்பியாஸம்செய்து அநேகவுபநிடத பாஷ்யபுராண வ்யாக்கியானவாதக்கிரந்தங்களை வடமொழிதென்மொழிகளில் சிவாத்துவிதிகளுக் குதவிபுரிந்தும் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஸமஸ்கிருதங்களில் ஈசன் சிரம் விட்டிழியும் ஸ்ரீகங்கைப்பிரவாகத்துக்கு நிகராய் திவ்விய பிரசங்கமாரி பொழிந்து தென்னாட்டின் பலபாகங்களை யலங்கரிக்கும் நாவலியும்பெற்ற வவதாரபுருஷரும், அவைதிகதிமிரசண்டமார்த்தாண்டனும், வைதிககர்மநிஷ்டாதுரந்தர சிகாமணியும், அன்று ஸ்ரீ ஞானசம்பந்த குருராஜனவதரித்தருளிய திவ்ய கௌண்டின்யகுலத்துதித்தவருமாய பரசமயபஞ்சானன பாரமேசுவரோபநிஷன்மார்க்கப் பிரவர்த்தக சிவாத்துவித சிகாமணியுமான எமது ஆசிரியர்பால், ‘யாம் தேசம்விட்டுத் தேசம்வந்து எல்லாச்சுற்றத்தார்களையு மற்றதையும் துறந்து காசிசேர்ந்து அநேகபண்டிதர் சகவாஸம்பெற்றும் அவர்பேற்றை படையமுடியாமற்போயிற்றே. எம்மால் ஒரு சிறு வடமொழிநூ லியற்றமுடியுமா? ஏதேனும் ஒரு உபநிடதத்திக்குப் பாஷ்யஞ்செய்ய வியலுமா? ஒரு பாஞ்சராத்திரியைக் கண்டிக்கவாற்றலுளதா? எப்படி ஐயா பத்திரிகை நடாத்துவார்? பாரெல்லாஞ்சென்று பிரசங்கமாரிபொழிவார்? எவ்விதந்தான் அவைதிக சைவ கண்டனங்கள் செய்வார்? எப்படித் தான் வைதிகமார்க்கத்திற் சுத்த சிவாத்துவித நிலைபற்றிய நூல் எழுதுவார்? எப்படிப் புறமதத்தவரை நிக்ரகிப்பார்? எப்படி நவீன வைணவ நிக்ரகம் நடாத்துவார்? எங்ஙனம் தர்மசாஸ்திரங்களுக்குரைசெய்வார்? எப்படி இரண்டு யந்திரசாலைகளின் லௌகிகத்தை முடிப்பார்? எப்படி யாகாதி சுவதர்மங்களை நடத்துவார்? எப்படி சீடர்களுக்குப் பாடங்கள் சொல்லுவார்? எப்படி வேண்டிய அனேகநூல்களைப் படிப்பார்’ என்பதாதி) கொண்டதோர் பெரும்பொறாமையால் எழுதினவையாதலால் அவற்றிற்கு மறுப்புயாதும்

எழுதவேண்டுவதேயில்லை. கலிகண்டகோத்தாரத்தில் சிரோ விரதவிஷயம் தீர்மானித்திருப்பதைக்கண்டு இதுகாறும் இரண்டுவருடங்களாகவும் பிரதிவாதிகள் ஒன்றும் வாய்திற வாமற் கிடைப்பதை விசாரித்தாலே அதனுண்மை விளங் காமற்போகாது. வித்தியாரண்யர் ஏதோ சிரோவிரதம் பாசுபதம் என்றுரைசெய்ததாகச் சொன்னூர். அது அவ ரிடம் குற்றமில்லை. அதிகரண ரத்னமாலையில் ப்ரம்ம சூத்திரம் மூன்றும் அத்தியாயம் மூன்றும்பாதம் முதலதி கரணத்தில் (ஶிரோவ்ரதாக்யோ தர்ம: ஸ்வாத்யாயதர்மோ ந வேதநே) 'சிரோவிரதம்' என்றதருமம் சுவாத்யா யத்திற்கேயன்றி வித்யாங்கமல்ல என்று சொன்னதை இவர் அறியார்போலும்! மீண்டும் 'ஸமாசாரே' என்று சூத்திரகாரரும் பாஷ்யகாரர்களும் கோஷித்திருக்க அதிற் கண்ட விதியெல்லாம் எழுதாக்குறை சாஸ்திரிகளுக்கும் உண்டென்கிறூர். இதெல்லாம் மேற்கண்ட சூத்திரபாஷ் யங்களைப் பார்க்காதகுறையேயாம். இவர் இந்தப்பெரிய விஷயத்துக்கு அனேகர் சேர்ந்தாலோசித்து பதில் உரை க்கவேண்டும் என்றதும் ஏதோ தாம் பெரியவிஷயத்தைக் கண்டெழுதியதுதான் மனப்பாலின் பெருமையேயாம். பிறகு இவர்கொண்டபடி ஸ்ரீமகாமகோபாத்யாயர் அவர்க ளும் சிவமஹிமகலிஸ்தவ வியாக்கியானத்தில் எழுதியதாக வும் அதற்கு விரோதார்த்தத்தை எமது குருநாதர் சொன் னதாகவும் எழுதும் வேடிக்கையைக்காண்பாம். எமது பர மாசாரியர் அவர்கள் எழுதிய ஸ்ரீ சிவமஹிமகலிஸ்தவத் தில் சிரோவிரதம் வேறு, அதர்வசிரஸிலுள்ள பாசுபதம் வேறு எனக் காட்டப்பட்டிருக்க அதன் பொருளறியவாற் றலற்ற விவர் அந்தோ தம்குற்றத்தைப் பிறர்மேலேற்றி மகிழ்வாரானூர். ஸ்ரீ சிவமஹிம கலிஸ்தவ வியாக்கியானத் தில் ஸ்ரீ மகாமஹோபாத்தியாய பரமாசாரியர் எழுதிய வச னங்களாவன:— 20-வது சுலோக வியாக்கியானத்தில் அச் செய்யுளிலுள்ள 'தீக்ஷா' என்றசொல்லுக்கு வைதிகதீக்ஷை யும் ஆகமதீக்ஷையும் பொருளாகலாம் எனக்காட்டி மீண் டும் 'உண்மையில்' என்றெடுத்து

'ஸத்ஸத்தீக்ஷாபிரிதி த்ரய்யுக்தைர்வைதிகைஸ்த்ரிபி: தாநிவ்ரதாநி ஶாம்பவவ்ரதம் பாஶுபதவ்ரதம் ஶிரோவ்ரதமிதி'

'உண்மையில் தீக்ஷைகள்' என்றது விரதங்களைக் குறிக்கும். அவைமூன்று:—சாம்பவவிரதம், பாசுபதவிர தம், சிரோவிரதம்'' என்று எனப் பகுத்து, ஸ்ரீகாலாக்னி ருத்திரோபநிடதத்தில் சொல்லப்பட்டது சாம்பவம் என் றும், அதர்வசிரஸில் சொல்லப்பட்டது பாசுபதம் என் றும், ஸ்ரீமுண்டகத்தில் சொல்லப்பட்டது சிரோவிரதம் என்றும் விரித்துக்காட்டினூர்கள். அவர்கள் மேற்கண்ட கருத்துடன் எழுதியவசனங்கள்.

(தத்ராத்ய: காலாக்நிருத்ரோபநிஷதி — த்ரியாயுஷம் ஸ நாகரோதிவ்ரதமேதச்சாம்பவம்) என்பது ஒன்று (த்விதீயம் த்வதர்வஶிரஸி — தஸ்மாத் வ்ரதமேதத் பாஶுபதம்) என்பதுஒன்று த்ருதீயம் து முண்டகோபநிஷதி — ஶிரோவ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம்) என்பது ஒன்று. ஆக இவைகளே. இவற் றின் கருத்தை யுற்றுநோக்கில் ஸ்பஷ்டமாய் இம்மூன்றும் ஒன்றுக்கொன்று வெவ்வேறு இலக்கணம்பெற்றன வெனப் பட்டமையால் இவர்கூறியவாறு அதர்வசிரஸில் சொல்லப் பட்ட விரதமே சிரோவிரதமல்ல; மற்று இது ஒருவகை பஸ்மதாரணமாம் என்று அதன்பொருள். மேலும் அவை மூன்றுவிதம் எனப்பகுக்குமிடம், சாம்பவபாசுபத சிரோ விரதங்கள் என்றுபதேசத்தருளினூர்களேயன்றி இவ்வாதி யார் எடுத்தபடி 'சாக்தீ, சாம்பவீ, மந்திரசம்ஸ்காரதீக்ஷை' என்றுவது வேறுவது எடுக்கவில்லை. மேலும் முன்னர் ஆகமப்பிரசித்த சாக்ஷுஷதீக்ஷையாதிகள் எனப்பொருள் எடுத்து அவற்றைவிட்டு உண்மையில் என்று வைதிகத் தையே பொருளாக்கினமையாலும், அவர்கள் இதயம் இம்மூவகை வைதிக பாசுபததீக்ஷைகளும் தாந்திரிக சம் பந்த மற்றவை என்பதே. நிற்க. இவர்கொண்ட வபிப்பிரா யம் ஸ்ரீமத் குருநாதர்களுக்கு மிருக்குமாயின் அவர்கள் அந்நூலில் அடியில்வரும் விஷயங்களை எழுதுவார்களா? பாருங்கள்! அவர்களே இதேபிரகரணாரம்பத்தில் (கேவலாகமிகாநாமபி ஶிவத்யாநவஶாத்ப்ரோக்தபலாவாப்தி:) 'கேவலாகமிகர்களுக்கும் சிவத்யானத்தின் வலியால் சொன்னபலங் கூடுமாயின்' என்று வைதிகரிலும் சிறிது ஆகமிகர்களைக் குறைத்துப் பேசுவார்களா? அதுமட்டோ! அடுத்தசுலோகத்தில் 'காமிகாதி இருபத்தெட்டாகமங்களும் ஈசனது திருமேனியாகத் தியானிக்கவேண்டும்' என்றவிஷ யத்தை நிரூபித்தபிறகு:—

(ஶைவாகமஶ்ரேஷ்டிதம் தந்த்ராணாமேகைகம் ப்ரதிவா க்யதந்நிஷ்டாநாம் தந்த்ராணாமபி க்ரமேண வா ஸர்வேஷாம் ஸாதாரா ப்ராப்திரோஹதந்நிஷ்ட இதி| தந்த்ராயுரா நுஷ்டாநஶ்ரத்தயா பாவநாமேவ த்யேய:——வாம்வாதாத்யோமயா: காமா தைநவோவகாரகா: || தாந்த்ரிகாணா மேஹதேவி நவ்ஹ்ருவ்யயாநக: | உதிஸமதஸம்ஹிதாமத மேதிவம்யாதிவசநை: ஜநாஷநோ ஸவஸ்வதி வாணாராண மேஹஹத வேதவாக்ய விஷயக ஶ்ருதா ஜாஹந வேதஜந்ஜாநாரோவாத்ய தேஷாம் ஶிவ ப்ராப்த்யவவணாநாதிகிதா:)

இங்ஙனம் ஆகமங்கள் எனப்படும் தந்திரங்கள் ஈச
னுக்கங்குங்கள் எனக்காட்டி அதில் நிஷ்டையுடையார்
க்குக்கிரமமாக பரமேசுவரப் பிரசாதம் கைகூடுங்கால் வீடு
கூடும்' என்கிருர். 'தன்னிஷ்டன்' என்பதால் (என்று
மூலத்துக்கவதரணிகைவைத்து) தந்திராநுஷ்டான சிரத்தை
'யினல் செய்துகொண்டே இருப்பவன் அச்சொற்பொருள்
பாஞ்சராத்திராதிமார்க்கங்கள் காலத்தாலேயே யுபகரிக்கும்.
தாந்திரிகர்களுக்கும் எனக்கும் இடையே மறைவுண்டாக
லின் அவர்களுக்கோ தேவி யான் அகப்படேன்' என்ற
சூதசங்கிதை முக்திகண்டாதிவசனங்களால் ஸர்வஸ்மிருதி
புராணமூல பூதமான வேதவாக்யவிஷய சிரத்தையை மறு
ஜன்மத்திலடைந்து அதனல் 'வைதிக விசுவாஸம் வேதார்
த்தஞானம்பெற்று பரசிவத்தையடைவார் என்பது சொல்
லப்பட்டமையால்' என்று நிரூபித்தருளினர். இதுவும் இவ
ருக்கு மிகச்சாதகமே. இக்காலத்தில் அப்பொழுது ஸ்ரீமத்
அப்பயதீக்ஷிதர் அவர்கள் உபகரித்ததுபோல் உலகத்தாருக்
குண்மைவிளக்கி யுபதேசித்து நன்மைவிளக்கும் ஸ்ரீ பர
மாசாரிய ஸ்ரீமகாமகோபாத்தியாயர்கள் இங்ஙனம் சொல்
லியிருப்பதை மாற்றி ஏதோ இவர் இஷ்டப்படி மகாமகோ
பாத்தியாயர் அவர்கள் எழுதியிருப்பதாயும் அதற்கு விரோ
தமாக ஸ்ரீமதாசாரியர்கள் எழுதியதாகவும் இவர் எழுதி
யது புறட்டென்றும்காட்டினேம். ஆகையால் மேற்கண்ட
படி ஸ்ரீமத் லோககுருஸ்வாமிகள் வியாக்யானம் மிகவும்
பொருந்தியதே என்க. அற்றேல் ஸ்ரீ மகாமகோபாத்தியாயர்
கள் சாம்பவபாசுபத விரதங்களையும் வேறுபடுத்தினர்களே
யாதலால், அவைகளும் வேறே எனின், அற்றன்று. அவை
கள் முற்றிலும் வேறுபடாதனவாகிலும் ஒருவழியில்
அதாவது திரிபுண்டரம் உத்தூளனம் என்கிறவகையில்
வேற்றுமைபெற்றது. அதர்வசிரஸில் உத்தூளனமும் கா
லாக்னிருத்திரத்தில் திரிபுண்டரமும் சொல்லப்பட்ட
மையின் என்க. மேல் ஸ்ரீமத்தீக்ஷிதசுவாமிகள் பஸ்மவா
தாவளியில் சிரோவிரத சப்தத்துக்கு பஸ்மதாரணம் பொ
ருள் என்று புராணப்பிரமாணங்காட்டினர். ஆனாலும் அவர்
களும் தாந்திரிக பாசுபத தீக்ஷாபரம் என்று சொன்னர்க
ளில்லை. மேலும் ஸ்ரீபரிமளம், சிவார்க்கமணிதீபிகை, நய
மணிமாலை, நயமயூகமாலிகையாதிநூல்களிலெல்லாம் ஸ்ப
ஷ்டமாய் இது ஆதர்வணருக்கே யுரியதோர் விரதம் என்று
அவ்விராஜயோகிகளே காட்டியிருப்பதை இவர் அறியார்
போலும்! ஆகையால் எல்லாபாஷ்யங்களையும் ஒத்துப் பெரி
யோர்கள் போற்றும் ஸ்ரீமத் வியாஸசூத்திரத்தையும் நோ
க்கி (வ தா௦ஷு ஹவித்யா௦ வ தஈவீணஷு த:)
என்று முண்டகசுருதியுள்ள 'இந்த' என்ற சுட்டுச்சொ
ல்லுக்கியைய ஸ்ரீலோககுருஸ்வாமிகள் சொன்ன பொ
ருள்பொருந்தியதறிக. மேல் சுத்தவித்தையே கோமயமாக
ஜாபாலங்கூறுவதால் தன்றலையிற்றனே ருத்திராக்னியி
ட்டுச் சுட்டதையே யன்றோ நீறுக்கித்தரிப்பது சிரோவிரு
தம் என விவரும் சொல்லுகிருர். ஆகவே பிரம்மவித்தை
மேற்றீயிட்டகுற்றம் இவரைமட்டும் விடாதொழியுமோ?
மேலும் ஸ்ரீகண்ட சிவாசாரியாராதியனேக மூதறிஞர் ஒது
க்கியதும் அனேக புராணநிந்திதமுமான அவைதிகாகமதீ
க்ஷையை இச்சிரோவிரதச் சொல்லுக்குப் பொருளெனவு
ரைக்க இவரே முதல் மனிதராய் வெளிவந்தது மிகவுமா
ச்சரியமே. இவர் சாம்பவமதஸ்தாபகர்களான மூதாசிரியர்
எவர்வழியும் பற்றாது [கேனாபெ ஸுதீய: வ௦யா:]
'முருறிக்குற்றது மூன்றும்' வழியென்று வெளிவந்தவை
பவம் சாலவும் பெரிது. இவர்தமக்குப் பாஷ்யக்காரர் என்று
புகன்று சந்தோஷித்த ஸ்ரீகண்டர் வாக்கையாவது கொ
ண்டாரா? ஆனல் இவர் ஈழநாட்டின் பெருமை எழுதப்
புகுந்தபொழுது சிவஞ்ஞான பண்டிதரையுந்தான் ஒருமகா
பாஷ்யகர்த்தாவென்றனர். இவர் இரு பாஷ்யங்களையும்
சாந்திபாடம் படிக்கவேண்டியவராகவே இவர் கொண்ட
தும் கொள்ளாததும் ஓர் குற்றமல்ல. மேலே ஐந்தாம்வே
தம் புராணம் என்று சென்றவூ ப்ரம்மவித்தை பேசுவ
தால் கற்பசூத்திரங்கள் எனப்பட்ட புஸ்தகங்களிலும்
அவைமேல் என்றும் 'அக்கற்பசூத்திரங்களுபநிடதங்களா
கையால் உபபிருங்கணங்களைக்காட்டிலும் அவையே சிறந்த
னவென குருசரணபூஷணத்தில் குருமூர்த்திகள் சொன்
னது குற்றமாம் என்கிருர்- இதுதவறு. வேதாங்கங்கள்
என்பன வேதங்களே. உலகத்தில் சாத்தன்கை சாத்தன
ல்லாது வேறாகாதுபோல [ஹஸ்தௌ கல்போऽத வேதஸ்ய]
கற்பசூத்திரங்களை வேதத்தின் கைகள் என்பர்' என்று
'நிரூபித்த பிரமாணத்தாலும் வேறு அனேகப் பிரமாணங்
களாலும் கற்பசூத்திரங்கள் மிகச் சிறந்தனவே, இதன்பெ
ருமை ஆசிரியர் வைத்தியநாததீக்ஷிதீய வியாக்கியானத்
தில் விளக்கியிருக்கிருர்கள். மேலும் புராணங்களையும் இதி
ஹாஸத்தையும் ஐந்தாம்வேதமென்றது புகழ்மொழியேயெ
ன்பது அங்கேவிளங்கும். ஆதலாற்றான் கற்பசூத்திரங்க
ளில் சொன்ன உபாயனுதிகள் அவசியம் அனுஷ்டித்தே
தீரவேண்டும் என்பது புராணாதிகளில் சொல்லப்பட்டது
அவ்வளவு நித்தியமல்லவென்பதும் ஏற்பட்டது. ஆகையா
ற்றான் கேவல பௌராணிகத்தையனுஷ்டிப்பது அவ்வளவு
நித்தியமல்லவென்றும் எல்லாவைதிகரும் அனுஷ்டித்துவ
ருகிருர். ஆதலாற்றான் ஆசிரியர் ஸர்வவைதிக ஸம்பிரதி
பன்னம் என்றதறிக. இவ்வுண்மைக்கருத்தறியாது இவர்
இறகு சென்றவழியெல்லாம் எழுதித்தீர்த்தனர். மேலே
புராணங்களைத் தருமசாஸ்திரங்களிலும் மேலானவையெ
ன்றது ஆக்ஷேபமற்றவிஷயம் ஓர் புறமாயினும் இங்கு
வேதவிருதம் என்று கொண்டு சூத்திரம் இயற்றிய ஸ்ரீ
வியாஸாசாரியார் அபிப்பிராயத்துக்குத் தக்கபடியே பொ
ருளுரைக்கப்படடதாயிற்று. இதுவும் வியாஸவாக்யகௌ
ரவத்தாலேயேயன்றிவேறுவிதம் இல்லை. அங்ஙனம் சமாசா
ரக்கிரந்தத்தால் பொருளுரைப்பது பெருந்தவறெனில் அந்
தப்பழியை ஸ்ரீலோககுருஸ்வாமிகளுக்கு முன்னேதானே

ஸ்ரீகண்டமுனிவரே சுமக்கவேண்டும். நியாயந்தானே, இப்பொழுது வந்தபுதியசீடர் தமக்குத் தலைச்சுமையொன்று குருதக்ஷிணைகொடுத்ததாக எண்ணி அவரே யதை யேற்கவேண்டும். ஆகவே சுவீகிருத குருத்துரோகம் வாராவழி தாம் சொல்லிய தந்திரப்பொருளைவிட்டு ஸ்ரீகண்டராதி மூதறிஞர் வியாக்யைகளைக் கண்டடங்கி இச்சிரோவிருதத்தைத் தஞ்சிரோவிருதமாக்கிக்கொள்ளாது பண்டிதர் கண்டுகொண்டாடும் வழியில் வருவாராகவென்று நமது செந்திறுதையரை வேண்டுவதோடு இனி ஏதேனும் ஒரு நூலைக்கொண்டு வெளிவரவேண்டுமானால் ஆனைகண்டகுருடன் கதையாய் அங்குமட்டில் சிறிதுசிறிதாகக் கண்டு அதன்மட்டே சித்தாந்தஞ் செய்துகொண்டு வெளியாவது, சாதாரணத் தமிழருக்கருகமாயினும் நல்ல பண்டித சகவாஸம்பெற்ற தங்களைப்போன்றவர் பெயருக்கது அழகல்லவென்று எச்சரிக்கிறோம். மேலும் ஒரு நூலையாவது முற்றும் ஒரு முறையாவது ஸம்பிரதாயப்படி படிக்கவேண்டியது உண்மையறியவிரும்புவோருக் கவசியமன்றோ. அங்ஙனமின்றி ஏதோ லௌகிக தந்திரங்களால் காலங்கழிப்பவருக் கது எவ்விதமெழுதினும் குற்றமில்லை. அன்றிப் படிப்பிலிகளாகிய கல்வி வலியிலாதார்க்கு விஷயமெழுதுவது மிக்கச் சுலபமன்றோ. ஏனெனில், முன்பொருத்தம் அவர்களுக்கு வேண்டுமோ ? விரோதங்கூடாதா ? ஏதோ தென்னாட்டில் ராமசுப்பாசாஸ்திரிகளென்பவர் எழுதுவதுபோலவே எழுதிப்போடலாம். அதைப் படிப்பவருக்குப் பயன் யாது தரும்? ஐய, உமது ஆக்ஷேபங்களையெல்லாம் நன்கு ஒருமுறைக்குப் பன்முறையாகப் பார்த்து நீர் பிரமாணமாகவெடுக்கும் நூல்களையும் அவற்றிலுள்ள வசனங்களையும் பார்த்துத் தகுந்த விடைகளை விதண்டைபேசாது கொடுத்துவருகிறோமாதலால், நீங்களும் அவ்விதமே செய்யவேண்டும்.

இன்னும்வரும்.

---

## SLEEPING POSTURE.

காந்தத்திற்கு ஆகர்ஷணம் (Positive pole) விரோதானம் ( Negative pole ) என்னும் இரண்டுவிதமான சக்திகளுண்டு. இந்த இரண்டுசெக்திகள் மானிடசரீரத்திற்கும் உண்டு. ஒருகாந்தஊசியை கயிற்றின் நுனியில்கட்டி அக்கயற்றின் மற்றொருதலப்பை நாம்கையில் பிடித்துக்கொண்டால் அந்த ஊசியானது கொஞ்சநேரம் ஆடி பிறகு வடக்கைநோக்கிநிற்கும். மானிடசரீரத்தையும் அக்காந்தஊசிக்கு ஒப்பிடலாம். உலகத்தில், பூகோளசாஸ்திரத்தில் சொல்லியசமரேகை ( Equator ) க்கு உத்திரப்பிரதேசங்களில் வாசம்செய்கிறவர்கள் வடக்கே தலையைவைத்துக்கொண்டு படுக்கவேண்டும். மேற்படி ரேகைக்கு தெக்ஷிணப்பிரதேசங்களிலுள்ளவர்கள், தெற்கே தலையைவைததுப் படுக்கவேண்டும். பிரான்சு ( France ) தேசத்திலுள்ள சாஸ்திரசாலையின் வித்வான்கள் சிரச்சேதம் செய்யப்பட்ட வொருமானிடசரீரத்தைச் சில பரீக்ஷைகள் செய்தார்கள்- அந்த சரீரத்தின் சிரசு வெட்டப்பட்டபிறகு, அது உஷ்ணத்துடனிருக்கும்பொழுதே, அதைக்கொண்டுவந்து ஒருசுழியாணியின்மேல் வைத்தார்கள. உடனே அச்சவம் அங்கு மிங்கும் ஆடுவதற்கு ஆரம்பித்தது. கொஞ்சநேரம் அவ்விதமாடிக்கொண்டிருந்து, அதின்சிரசு வடக்கேநோக்கினவுடன், ஸ்தம்பமாய் அச்சவம் அசையாமல் நின்றுவிட்டது. மறுபடியும் அந்தச் சவத்தை வேறுதிக்கில் திருப்பிவிட்டுப் பார்த்தார்கள். அது முன்போலவே சிரசை வடக்குமுகமாய்த் திரும்பி நின்றுவிட்டது. இவ்விதமான பரிக்ஷைகளினால் மானிடசரீரத்திலும் காந்தத்திற்குள்ள ஆகர்ஷண சக்திகளிருக்கின்றன வென்றும், அவைகளிலொன்று உத்திர திக்கைநோக்கியது மற்றது அதோமுகமானதென்றும், நன்றாய் ஸ்தாபிக்கப்படுகிறது. நமது இந்துசாஸ்திரபிரகாரம் ஒருவன் கிழக்குதிக்கில் தனது சிரசைவைத்துப் படுத்தால் அம்மனிதன் மிகக் கல்வியில் பயிற்சியுள்ளவனாவான். தெற்குதிக்கில் சிரசுவைத்துப்படுத்தால் விசேஷபலத்தையும் ஆயுள்விருத்தியையும் அடைவான். மேற்குதிக்கில் சிரசுவைத்துப்படுத்தால் கெட்ட எண்ணங்களால் கஷ்டப்படுவான். வடக்குதிக்கில் சிரசுவைத்துப்படுத்தால் வியாதியும் சரீராசௌக்கியமும் அடைவான். இதற்கொரு வசனமுண்டு:

தன்னூர்கிழக்கு தங்கினவூர்மேற்கு
வேட்டகத்தூர்தெற்கு வேண்டாதவூர்வடக்கு.

---

## கர்மம்.

ஞானியாயினும், பேதையாயினும், பேதகமின்றி யவரவர் பூர்வஜன்மத்திற் செய்த கர்மபலனை யனுபவித்தே தீரவேண்டும். அக்கர்மங்களுக் கவர்கள் அடிமையானவர்கள். இவ்வாறு அனுபவிக்குங்கால், விவேகியானவன் விசனமற்றவனாய், மனம்நோகாமல், அனுபவித்து அந்தக் கடனைத்தீர்க்கின்றான். புத்தியில்லாப் பேதையோவெனின், இக்கதி தனக்கு நேர்ந்ததேயென்று துயருற்று மனமொடிந்து கவலைகொள்கிறான். ‘அழுதாலும் பிள்ளையவளே பெறவேண்டும்’ என்னும் பழமொழிப்படி அவரவர்செய்தகருமம் அவர்களைவிடாது. தத்பலம் தப்பாது. எப்படியாயினும், சந்தோஷமாகவோ, விசனத்துடனோ அனுபவித்தே தீரவேண்டுமென்றி வேறல்ல. விவேகமுள்ளவன் காரணத்தையூகித்துப் பொறுமையுடன் அனுபவிக்க, மந்தமதியுடையவன் அதை யோசியாது துக்கிக்கின்றனன்.